அமர்வு வழக்கு எண். 23/2016

அ.சா.1 தனசேகர் த/பெ துரைராஜ்

**15.11.2024**

**எதிரிகள் 2,3,5,10,11, ஆஜர். 1ம் எதிரி இறப்பு. எதிரிகள் 4,6,7,8,9 ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 எதிரிக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**மனுவின் பேரில் அ.சா.1ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அ.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

1. எனக்குநன்றாகஎழுதப்படிக்கதெரியும்என்றால் சரிதான். நான் இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சமயத்தில் அளித்துள்ள சாட்சியமானது போலிசார் நீதிமன்றத்திற்கு வெளியே சொல்லி கொடுத்ததன் பேரில் சொன்ன சாட்சியம் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் நான் மருத்துவமனையில் சேர்ந்த அன்றே கையெழுத்து செய்தேன்.

2. நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் எத்தனை கையெழுத்துக்கள் வாங்கினார் என்று நினைவில்லை. 2,3 கையெழுத்து போட்டிருப்பேன். நான் கையெழுத்து செய்த தாள்கள் அனைத்திலும் எழுதப்பட்டிருந்தது. அவ்வாறு நான் கையெழுத்து செய்த 3, 4 பேப்பர்களில் எந்த பேப்பரில் செய்த கையெழுத்தின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது.

3. என் மீது எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் இதே வழக்கு சம்மந்தப்பட்ட மற்றொரு வழக்கு தான் நிலுவையில் உள்ளது வேறு வழக்கு எதுவும் இல்லை. 9ம் எதிரி செந்தில் மற்றும் அவரது அண்ணன் மகள் ஆஷா ஆகியோர் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்மீது நிலுவையில் உள்ளதுஎன்றால் சரிதான். அவ்வாறு என்மீது கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் எதிரிகள் சமாதானமாக வர வேண்டுமென்ற காரணத்தினால் தான் அந்த புகாருக்கு எதிர் புகாராக இந்த வழக்குபுகாரை நான் கொடுத்து அதன் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4. சம்பவம் நடந்த அன்று மட்டும்தான் போலிசார் என்னைவிசாரித்தார்கள்என்றால்இல்லை. சம்பவத்திற்கு மறுநாள் மருத்துவமனையில் என்னை போலிசார் விசாரித்தார்கள்.